*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 324/2024***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-1 (LW-1)***

*Name / Father's Name:* ***திரு.பெரியசாமி த/பெ. குள்ளன்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **03.02.2026.**

துவக்க நேரம் 11.28 F.N

**எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது ஏத்தாப்பூர் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2024ம் ஆண்டு தம்மம்பட்டி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 2023ம் ஆண்டு ஆடி 18 நோன்பு அன்று அரசு அனுமதி பெறாமலும், பாதுகாப்பு ஏற்பாடு எதுவும் செய்யாமலும் செந்தாரப்பட்டியில் ஆமையன் (எ) மணி த.பெ அருணாச்சலம் என்பவரின் தலைமையில் போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் இடையூறு ஏற்படும் வகையிலும், வன்முறையை துாண்டும் வகையிலும் பொதுமக்களின் உயிருக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய ஜல்லிக்கட்டு நிகழ்ச்சி நடந்ததால், 2024ம் ஆண்டு அதேபோன்று அசம்பாவிதம் எதுவும் நடைபெறாமல் இருப்பதற்காகவும், பொதுமக்களின் பாதுகாப்பு ஏற்படுத்தவேண்டியும் என்னையையும், என்னுடன் முதல் நிலைக்காவலர் திரு.விஜயகுமார் மற்றும் ஊர்காவல் படை காவலர் திரு.விஜயகாந்த் ஆகியோர்களை ரோந்து அலுவலாக நியமித்து செந்தாரப்பட்டி பகுதியில் ரோந்து அலுவலலில் ஈடுபட்டு கொண்டிருந்தேன்.

2) அப்பொழுது செந்தாரப்பட்டி எம்.ஜி.ஆர் சிலை அருகில் விஜய் த.பெ பொன்னுசாமி என்பவர் ஜல்லி மாடு விடுவதற்கு தயாராக இருப்பதாக எனக்கு தகவல் கிடைக்கப்பெற்றது. அந்த தகலின் பேரில் என்னுடன் ரோந்து அலுவலில் இருந்த போலிஸ் பார்ட்டியுடன் உடனடியாக புறப்பட்டு மதியம் சுமார் 1 மணி அளவில் அங்கு சென்றேன். அங்கு விஜய் என்பவர் மிகுந்த குடிபோதையில் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறு ஏற்படும் வகையில் ஜல்லிமாடு விடுவதற்கு தயாராக இருந்தார். நான், அவரிடம் அரசு அனுமதி இல்லாமல் ஜல்லிமாடு விடக்கூடாது, கலைந்துசெல்லுங்கள் என்று சொன்னேன். அதற்கு அவர் அதிக குடிபோதையில் நீ யார் சொல்வதற்கு நான் அப்படிதான் ஜல்லிமாடு விடுவேன் என்று சொல்லிக்கொண்டு அருகில் இருந்த EB கம்பத்தில் கட்டிவைக்கப்பட்டிருந்த ஜல்லிமாட்டை அவிழ்த்துவிட்டார்.

3) அந்த ஜல்லிமாடு பொதுமக்கள் கூடியிருக்கும் கூட்டத்தை நோக்கி உயிருக்கு ஆபத்தை விளைவிக்குமாறு ஓடியது. நான், விஜய்யிடம் இவ்வாறு செய்யக்கூடாது என்று போலிஸ் பார்ட்டியுடன் தடுப்பதற்குள் அவர் பொதுமக்களை பார்த்து யாரடா போலிசுக்கு தகவல் சொன்னது என்று தேவடியா பசங்களா என்று கெட்ட வார்த்தையால் திட்டி ஜல்லிமாடு மூக்கனாங்கயிறு அறுக்கும் கத்தியை காட்டி போலிசுக்கு தகவல் சொன்னவனை அறுத்து கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார்.

4) அப்பொழுது என்னுடன் பணியில் இருந்த சக காவலர்களுடன் விஜய்யிடம் தடுத்தபொழுது கேட்காமல் ஜல்லிமாடு ஓடும் திசையை நோக்கி ஓடிவிட்டார். பிறகு 14 மணிக்கு தம்மம்பட்டி காவல் நிலையம் வந்து அரசு அனுமதி பெறாமலும், முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளாமலும் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறு ஏற்படுத்தும் வகையிலும், பொதுமக்களை கெட்ட வார்த்தையால் திட்டியது குறித்தும் ஜல்லிமாடு மூக்கனாங்கயிறு அறுக்கும் கத்தியை காட்டி போலிசுக்கு தகவல் சொன்னவனை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டியதும்,

பொதுமக்களின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய அபாயகரமான ஜல்லிமாட்டை பொது இடத்தில் அவிழ்த்துவிட்டது குறித்தும், தம்மம்பட்டி காவல் வட்ட காவல் ஆய்வாளரிடம் புகார் கொடுத்தேன். அவர் வழக்கு பதிவு செய்து நடவடிக்கை மேற்கொண்டார்.

5) என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(புகார் மனு அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** தம்மம்பட்டி வட்ட காவல் ஆய்வாளர், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்.

**எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) அ.த.சா.ஆ.1, என்னால் தட்டச்சு செய்யப்பட்டு தம்மம்பட்டி வட்ட காவல் ஆய்வாளரிடம் கொடுக்கப்பட்டதா என்றால் ஆமாம். மேற்படி புகாரில் எந்த தேதியில் புகார் கொடுக்கப்பட்டது என்பதற்கான குறிப்பு எதுவும் இல்லை என்று சொன்னால் சரிதான்.

2) நான் கொடுத்த புகாரில், கடந்த 2023ம் வருடம் ஆடி 18 அன்று அரசு அனுமதி பெறாமலும், எவ்வித பாதுகாப்பும் இன்றி செந்தாரப்பட்டியை சேர்ந்த ஆமையன் (எ) மணி த.பெ அருணாச்சலம் என்பவரின் தலைமையில் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறு ஏற்படும் வகையிலும், வன்முறையை துாண்டும் வகையிலும், பொதுமக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடிய நிகழ்வு நடந்தது என்று குறிப்பிட்டுள்ள நிலையில், மேற்படி ஆமையன் (எ) மணி மீது நடவடிக்கை எதுவும் எடுத்துள்ளோமா என்றால் இல்லை.

3) கடந்த 2023ம் வருடம் ஏற்பட்ட நிகழ்வை அடிப்படையாகக்கொண்டு, கடந்த 2024ம் வருடம் ஆடி 18 அன்று எதாவது அசம்பாவிதம் நிகழக்கூடாது என்று முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ரோந்து பணியில் ஈடுபட்டோமா என்றால் ஆமாம்.

4) நான் கொடுத்த புகாரில், " செந்தாரப்பட்டி எம்.ஜி.ஆர் சிலை அருகில் விஜய் த.பெ பொன்னுசாமி என்பவர் மிகுந்த குடிபோதையில் ஜல்லி மாடு விடுவதற்கு தயாராக இருந்தார் " என்று சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். நான் ரோந்து பணிக்கு சென்றபொழுது என்னுடன் எத்தனை காவலர்கள் இருந்தார்கள் என்றால் ஊர் காவல்படையை சேர்ந்த ஒருவரும், ஒரு காவலரும், நானும் மொத்தமாக மூன்று பேர் சென்றோம்.

5) எதிரியை பிடித்துச்செல்வதற்கு முன்பாக மணிகண்டன் என்பவரை அனுமதி இல்லாமல் ஜல்லிமாடு விட்டதற்காக அடித்து இழுத்துச்சென்றோமா என்றால் இல்லை. மேற்படி மணிகண்டன் எதிரியின் மாமன் மகன் என்பதால் அவரை ஏன் அடிக்கிறீர்கள் என்று எதிரி விஜய் கேட்டதால் அவருக்கு எதிராக இவ்வழக்கின் புகாரை கொடுத்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல.

6) எதிரியிடமிருந்து மூக்கணாங்கயிறு அறுக்கும் கத்தி எதையும் கைப்பற்றினோமா என்றால் இல்லை. எதிரி ஜல்லிமாடு வளர்த்து வருகிறாரா என்பது பற்றி நான் விசாரித்து தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. மணிகண்டன் எதிரியின் மாமன் மகன் என்பதால் அவரை ஏன் அடிக்கிறீர்கள் என்று எதிரி விஜய் கேட்டதால் அவருக்கு எதிராக இவ்வழக்கின் புகாரை கொடுத்து, அதற்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 11.52 F.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.02.03 17:33:20 +0530

Judicial Magistrate No.2, Attur.